# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2020–ம் வருடம் பிப்ரவரி மாதம் 28–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019-2020-கீழ் பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் கீழ்காணும் கட்டிட பணிகள் மேற்கொள்ள ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | பத்மனாப்புரம் நகராட்சி கல்குளம் தாலுகா அலுவலகம் எதிரில் உள்ள தக்கலை அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள பழுதடைந்த ஓட்டுக் கூரை கட்டிடத்தை அகற்றி விட்டு 800 சதுர அடி பரப்பளவில் 2 வகுப்பறைகள் அடங்கிய கட்டிடம் கட்டுதல். | 12.00 |

மேற்படி பணிகளைச் செய்ய கூடுதல் ஆட்சியர் (ம) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ3/4068/2019, நாள் 13/02/2020 ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**மன்றத் தீர்மானம் எண். 1597**
பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

ஆணையாளர்(பொ)
பத்மனாபபுரம் நகராட்சி.